**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 26/2023 |
| Name | : Parveen Banu |
| P.W. | : 5 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.08.2025

**எதிரிகள் 1 முதல் 4 நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் கோவையில் வசித்து வருகிறேன். இல்லத்தரசியாக உள்ளேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1 எனது தங்கை. அவரை திருமணம் செய்து கொடுத்து 6 வருடங்கள் ஆகிறது. திருமணத்திற்கு பின்பு அவரது கணவர் மற்றும் மாமியாரிடம் சிறு, சிறு பிரச்சனைகள் இருந்து வந்தது. 09.12.2020 ம் தேதி என் தங்கைக்கு குழந்தை பிறந்தது அவர் 2 மாத கர்ப்பமாக இருந்த போதே பிரச்சனை ஏற்பட்டு அவரை எனது அம்மா அ.சா.2 நஜுமுனிசா அழைத்து வந்து தன்னுடன் வீட்டில் வைத்துக்கொண்டார். குழந்தை பிறந்த உடன் தகவல் சொல்லி அனுப்பினோம். குழந்தையை பார்ப்பதற்கு மறு நாளே அவர்கள் மருத்துவமனைக்கு வந்தார்கள். அதன் பின்பு கணியூர் வீட்டில் வாராவாரம் பார்க்க வரும்போது பிரச்சனை ஏற்பட்டு வந்தது. 17.01.2022 ம் தேதி குழந்தைக்கு 40 ம் நாள் நிகழ்ச்சி ஏற்பாடு செய்து என்னை அழைத்தன் பேரில் நான் 15.01.2022 ம் தேதி எனது அம்மா வீட்டிற்கு வந்தேன். அன்று மாலை 06.00 மணி அளவில் ஆஜர் எதிரிகள் பிரேம் நசீர், அவரது அம்மா, அப்பா, அக்கா சபானா ஆகியோர் காரில் எங்கள் வீட்டிற்கு குழந்தையை பார்க்க வந்தார்கள். வீட்டிற்குள் நுழையும் போதே 40 ம் நாள் நிகழ்ச்சிக்கு போனில் தான்தகவல் சொல்வீர்களா நேரில் வந்து சொல்ல மாட்டீர்களா என்று ஏண்டி

தேவடியாகளா என்று கொச்சையாக பேசிக்கொண்டு உள்ளே வந்தார்கள் அதற்கு எனது அம்மா ஏன் இப்படி பேசுகிறீர்கள் என்று கேட்டார். அதற்கு பிரேம் நசீர் என் தங்கையை பார்த்து உனது அம்மாவை வாயை மூடிக்கொண்டு இருக்கச் சொல்லு என்று சொன்னார். எனது தங்கை ஏன் உங்கள் அம்மாகெட்ட வார்த்தை பேசுகிறார் என்று கேட்டதற்கு பிரேம் நசீர் என் தங்கையின் இடது கன்னத்தில் கையால் அடித்துவிட்டார். அவரது அம்மா கெட்ட வார்த்தை பேசிக்கொண்டிருந்தார். என் அம்மாவை சபானா பருப்பு மத்தினால் இடது கன்னத்தில் அடித்துவிட்டார். என்னிடம் காட்டப்படும் அ.சா.பொ.1 பருப்பு மத்து தான் அது. எங்கள் அம்மா மயக்கம் போட்டு விழுந்துவிட்டார். சத்தம் கேட்டு பக்கத்து வீட்டுக்காரர்கள் இப்ராகிம் மற்றும் சாஜிதா வந்து தடுத்தார்கள். எங்களையும் அடித்துவிட்டு சென்று விட்டார்கள். எங்கள் அம்மாவை மடத்துக்குளம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம் அன்றைய தினம் மாலை கணியூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். குடும்ப பிரச்சனை என்பதால் போலீசார் இரு தரப்பையும் அழைத்து பேசினார்கள். மீண்டும் 28ம் தேதி எனது அம்மா சென்று போலீசாரிடம் சொன்னதன் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) நான் வேலைக்கு செல்லவில்லை இல்லத்தரசியாக உள்ளேன். நான் வேலைக்கு செல்கிறேன் என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் எனது தங்கையை பார்க்க வாராவாரம் வரும் போது தகாத வார்த்தை பேசியதாக போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். போலீஸ் விசாரணையில் அது போல் நான் சொல்லவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் நான் சொல்வது போல வீட்டிற்குள் வந்து தகாத வார்த்தைகள் எதுவும் பேசவில்லை என்றால் சரியல்ல. நான் கோவையில் வசிப்பதாக சொல்லியுள்ள நிலையில் எதிரிகள் வாராவாரம் வந்து தகாத வார்த்தை பேசியதாக எப்படி தெரியும் என்றால் எனது அம்மா பேசியதாக சொன்னார்.

(2) சம்பவம் நடந்ததாக சொல்லும் நாளில் என் தங்கையை அவரது கணவர் அடிக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் எங்கள் வீட்டிற்கு வந்த போது எங்கள் தாயார் தான் அவர்களை பார்த்து தகாத வார்த்தையால் பேசினார் என்றால் சரியல்ல. இரு

குடும்பத்திற்கும் வீட்டிற்குள் வாக்குவாதம் ஏற்பட்டது என்றால் சரிதான். நான் வீட்டில் இருந்த அன்னக் கரண்டியை எடுத்து லியாகத் அலி கான் தலையில் அடித்து காயம் ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. அவர்கள் தான் எங்களை அடித்தார்கள். நான் அடித்து காயம் ஏற்படுத்திய உடன் லியாகத் அலி கான் வெளியே சென்றுவிட்டார் என்றும் அதன் பின்பு எனது அம்மாவும், தங்கையும் அவர்கள் குடும்பத்தாரை கையால் அடித்தோம் என்றால் சரியல்ல. அதன் பின்பு லியாகத் அலி கான் கணியூர் மற்றும் மடத்துக்குளம் அரசு மருத்துவமனைக்கு சென்ற போது அது கொரோன தொற்று பரவல் காலம் என்பதால் உள்நோயாளியாக அனுமதிக்கப்படவில்லை என்றும் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்றால் சரியல்ல. சிகிச்சைக்கு பின்பு 18.01.2022 ம் தேதி கணியூர் காவல் நிலையத்தில் எங்கள் மீது புகார் கொடுத்தார் என்றால் தெரியவில்லை. 28.01.2022 ம் தேதியிட்ட கணியூர் காவல் நிலைய குற்ற எண். 18/2022 என்ற வழக்கு எங்கள் மீது பதிவு செய்யப்பட்டது என்றால் அதைப் பற்றி தெரியாது. அந்த வழக்கில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு எனது அம்மாவிற்கு எதிராக CC 25/2023 கோப்பிற்கு எடுக்கப்பட்டு விசாரணை நிலுவையில் உள்ளது என்றால் அதைப் பற்றி தெரியாது. 18.01.2022 ம் தேதி கொடுக்கப்பட்ட புகாரை 28.01.2022 ம் தேதி வரை வழக்கு பதிவு செய்ய விடாமல் தடுத்தோம் என்றால் சரியல்ல.

(3) நான் சொன்னது போல சபானா எனது தாயாரை அடிக்கவில்லை என்றால் சரியல்ல. என் தங்கை மற்றும் அவரது கணவருக்கு இருந்த பிரச்சனை காரணமாக வேண்டுமென்றே பொய்யாக இந்த புகாரை கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/–Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 26/2023 |
| Name | : Muruganandam |
| P.W. | : 6 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.08.2025

**எதிரிகள் 1 முதல் 4 நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் கணியூரில் வசித்து இடத் தரகராக வேலை செய்கிறேன். அ.சா.1 ன் மாமா பக்ருதீன் என்பவரை வீட்டில் இறக்கிவிட சுமார் 3 வருடங்களுக்கு முன்பு தேதி, மாதம், வருடம் ஞாபகம் இல்லை மாலை சுமார் 05.30-06.00 மணிக்கு சென்றேன். அப்போது காவல் துறை அதிகாரிகள் வழக்கு சம்மந்தமாக விசாரித்து வரைபடம் வரைந்தார்கள். வீட்டில் இருந்து பருப்பு மத்தை கைப்பற்றினார்கள். அதற்கு சாட்சியாக என்னிடம் கையொப்பம் கேட்டார்கள் நான் போட்டேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். **பார்வை மகஜர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** கைப்பற்றுதல் மகஜரில் உள்ள உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். **கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** தற்போது என்னிடம் காட்டப்படும் அ.சா.பொ.1 பருப்பு மத்து தான் அன்று கைப்பற்றப்பட்ட பொருள் ஆகும். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) பக்ருதீன் எனது நீண்ட கால நண்பர் என்றால் எனது பள்ளி வகுப்பு தோழர். பக்ருதின் எனது நண்பர் என்பதாலும், போலீசார் கேட்டுக்கொண்டதாலும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் என் முன்னிலையில் வரைபடம் வரையவில்லை, சான்று பொருள் கைப்பற்றவில்லை என்றும் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. இந்த வழக்குச் சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/−Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

மடத்துக்குளம்